# குளித்தலை நகராட்சி

2024ஆம் வருடம் மார்ச் மாதம் 15.ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு குளித்தலை நகராட்சி நகர்மன்ற கூடத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் பற்றி முடிவுசெய்ய நகர்மன்ற அவசரக்கூட்டம் நடைபெற உள்ளது. அதுசமயம் தாங்கள் தவறாது கலந்துகொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்,
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்-01.

இந்நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை இனமான பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 2023-2024ஆம் ஆண்டிற்கான மூன்றாம் தொகுப்பு குத்தகை உரிமத் தொகையினை செலுத்தக்கோரி திரு.ஏ.சக்திவேல் என்பவருக்கு அறிவிப்பின்மூலம் தெரிவிக்கப்பட்டது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை(4D) எண்.23, நாள்-01.12.2022ல், குளித்தலை நகராட்சி பேருந்து நிலையத்தில் ரூ.74.00 இலட்சம் மதிப்பீட்டில் கலைஞர் நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் 2022-2023ன்கீழ் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள வேலை உத்தரவிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, பேருந்து நிலையத்தில் அபிவிருத்தி பணிகள் நடைபெற உள்ளதால், மூன்றாண்டு குத்தகை இனங்களுக்கான குத்தகைதாரர்கள் மற்றும் கடைகளுக்குரிய குத்தகைதாரர்களை நகராட்சிவசம் குத்தகை இனத்தை 01.04.2023 முதல் ஒப்படைக்குமாறும், பேருந்து நிலையத்தில் அபிவிருத்தி பணிகள் முடிவுற்றபின் குத்தகைதாரர்களுக்கு உரிமம் திரும்ப ஒப்படைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

பேருந்து நிலையத்தில் அபிவிருத்தி பணிகள் முடிக்கப்பட்டு உயர்திரு குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு 18.02.2024ஆம் தேதி திறந்து வைக்கப்பட்டுள்ளது

மூன்றாண்டு குத்தகை இனமான பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தின் மூன்றாண்டு காலம் (2023-2024) 31.03.2024ஆம் தேதியுடன் முடிவடைகிறது. பேருந்து நிலையத்தில், 01.04.2023 முதல் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டதால், குத்தகைதாரர் குத்தகை இனத்தினை நகராட்சிவசம் ஒப்படைத்து உள்ளார். தற்போது பேருந்து நிலையத்தில் அபிவிருத்தி பணிகள் முடிவுற்று, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. SBM 2.O திட்டத்தின்கீழ் பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பிடத்தை இடித்துவிட்டு, நவீன கழிப்பிடம் கட்டும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

தற்பொழுது, பாராளுமன்ற தேர்தல் அறிவிப்பு வெளியாகும் நிலையில் உள்ளதாலும், பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர போதிய கால அவகாசம் இல்லை என்பதாலும், நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படாத வகையிலும், குத்தகைதாரர் திரு.ஏ.சக்திவேல் என்பவருக்கு, இரண்டாம் ஆண்டிற்கான (2022-2023) குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து கட்டணக் கழிப்பிடத்தில், கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தினை 2024-2025 ஓராண்டு காலத்திற்கு அல்லது புதிய கழிப்பிடம் கட்டி முடிக்கும்வரை, இதில் எது முதலில் நிறைவடைகிறதோ அதுவரை (01.04.2024 முதல்) நீட்டிப்பு செய்து வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). பேருந்து நிலையத்தில் அபிவிருத்தி பணிகள் முடிவுற்று, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. பாராளுமன்ற தேர்தல் அறிவிப்பு வெளியாகும் நிலையில் உள்ளதாலும், பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர போதிய கால அவகாசம் இல்லை என்பதாலும், நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படாத வகையிலும், குத்தகைதாரர் திரு.ஏ.சக்திவேல் என்பவருக்கு, இரண்டாம் ஆண்டிற்கான (2022-2023) குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து கட்டணக் கழிப்பிடத்தில், கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தினை 2024-2025 ஓராண்டு காலத்திற்கு அல்லது புதிய கழிப்பிடம் கட்டி முடிக்கும்வரை, இதில் எது முதலில் நிறைவடைகிறதோ அதுவரை (01.04.2024 முதல்) நீட்டிப்பு செய்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1769/2020/அ1)

பொருள்-02. குளித்தலை நகராட்சி பொது சுகாதார பிரிவில் உரம் தயாரித்தல், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் பராமரிப்பு பணி, மரக்கன்றுகள் பராமரித்தல், பிளாஸ்டிக் பேலிங் செய்தல், பேலிங் செய்யப்பட்ட பிளாஸ்டிக்கை சிமெண்ட் ஆலைக்கு அனுப்புதல் போன்ற பணிகள் மேற்கொள்ள தேவையான பணியாளர்களை விநியோகம் செய்ய, கீழ்க்கண்ட விவரப்படியான சுயஉதவிக் குழுவிடம் இருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம்.

| வ. எண் | பணி விவரம் | சுய உதவிக்குழு விவரங்கள் | நபர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|
| 1. | குளித்தலை நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு உரம் தயாரித்தல், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் பராமரிப்பு பணி, மரக்கன்றுகள் பராமரித்தல், பிளாஸ்டிக் பேலிங் செய்தல், பேலிங் செய்யப்பட்ட பிளாஸ்டிக்கை சிமெண்ட் ஆலைக்கு அனுப்புதல் போன்ற பணிகள் மேற்கொள்ள தேவையான பணியாளர்களை விநியோகம் செய்தல் | ஸ்ரீமகாமாரியம்மன் மகளிர் சுய உதவிக்குழு | 696.00 |
| | | ஸ்ரீசாய் மகளிர் சுயஉதவிக்குழு | 725.00 |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்ற ஸ்ரீமகாமாரியம்மன் மகளிர் சுய உதவிக்குழுவின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண்.313/2024/எச்1)

| | |
|---|---|
| பொருள்- 03. | குளித்தலை நகராட்சியானது 24 வார்டுகளும், 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 27910 மக்கள் தொகை கொண்ட இரண்டாம் நிலை நகராட்சியாகும். நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு 30 ஆண்டுகள் ஆகியும் மிக பழமையான எந்த வசதிகள் செய்ய இயலாத கட்டடத்தில் இயங்கி வருகிறது. எனவே, இந்நகராட்சியில் புதிய அலுவலக கட்டடம் கட்டுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடம் ரூ.350.00 இலட்சம் மதிப்பீட்டில் கருத்துரு தயார் செய்யபட்டுள்ளது. மொத்த மதிப்பீட்டில் 100.00 இலட்சம் நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் மீததொகை ரூ.250.00 இலட்சத்திற்கு குறைந்த வட்டியில் கடனாக பெற்று அலுவலக கட்டடம் கட்ட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அலுவலக குறிப்பு- | இந்நகராட்சியில் நாளது தேதியில் நிதி பற்றாக்குறையினால் செலுத்தப்படாத (Liabilities) பட்டியல்கள் ஏதும் நிலுவையில் இல்லை. இதுவரை பெற்ற கடன்களில் (Annuity) ஒவ்வொரு ஆண்டும் ரூ.5,81,856/-மட்டுமே செலுத்தப்பட வேண்டியுள்ளது. மேலும், திட்டங்களுக்கு வரும் ஆண்டுகளில் நகராட்சியின் பங்கு தொகை செலவிட வேண்டுமாயின் அதனை மேற்கொள்ளும் நிலையில் நிதி நிலமை உள்ளது. எனவே மதிப்பீட்டு தொகை ரூ.350.00 இலட்சத்தில் ரூ.100.00 இலட்சம் நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு மேற்கொள்ளவும் மீத தொகை ரூ.250.00 இலட்சத்திற்கு குறைந்த வட்டியில் கடன்பெற்று புதிய அலுவலக கட்டடம் கட்டும் பணிக்கு மதிப்பீடு தயார்செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதிக்கு சமர்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1045/2024/இ1) |
| பொருள்- 04. | இந்நகராட்சி பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கீழ்க்கண்டுள்ள காலிமனையில் தரைவாடகை கடைகள் திரு.ரா.வைரப்பெருமாள், குத்தகைதாரர் பெயரில் உள்ளது |

| | | | வரிவிதிப்பு எண். |
|---|---|---|---|
| 1) | ஜெனரல் மெர்ச்சன்ட் ஸ்டேசனரி விற்பனை பொருள் கடை | கடை எண்.13 | 083/123 |
| 2) | பேப்பர் மற்றும் புத்தக கடை | கடை எண்.18 | 083/128 |

மேற்கண்ட கடையின் குத்தகைதாரர் திரு.ரா.வைரப்பெருமாள், 13.07.2019ஆம் தேதி இறந்துவிட்டார். எனவே, அவரது மகளும், வாரிசுமான திருமதி.T.பாக்கியலெட்சுமி என்பவர், அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்-03.07.2007ன்படி உரிய கட்டணங்கள் செலுத்தி உரிமத்தை பெயர் மாற்றம் செய்துதரக் கோரிய விண்ணப்பத்தின அடிப்படையில் அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்-03.07.2007ன்படி, முதல் குத்தகைதாரர் திரு.ரா.வைரப்பெருமாள் அவர்களின் வாரிசுதாரரான திருமதி.T.பாக்கியலெட்சுமி, அனைத்து பாக்கி தொகைகளை செலுத்தியும் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி மன்றம் அவ்வப்போது நிர்ணயிக்கும் குத்தகை தொகை செலுத்த ஒப்புக்கொண்டதின்பேரிலும், குத்தகை உரிமத்தை திருமதி.T.பாக்கியலெட்சுமி பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு- | 1). மன்றம் அனுமதிக்கலாம்<br>2). அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்-03.07.2007ன்படி, மேற்கண்ட குத்தகை இனங்களை, |

திரு.ரா.வைரப்பெருமாள் என்ற பெயரில் இருந்து திருமதி.T.பாக்கியலெட்சுமி என்ற பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1986/2023/அ1)

பொருள்- 05. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.6, சபாபதிநாடார்தெரு வாய்க்கால்மேட்டு பகுதியில் பொதுமக்கள் மற்றும் நகர் மன்ற உறுப்பினர் அவர்களிடம் இருந்து பெறப்பட்ட மனுவிற்கிணங்க கோடை கால குடிநீர் பற்றாக்குறை தவிர்க்கும் பொருட்டு மினி பவர் பம்ப் மற்றும் அப்பகுதியில் சின்டெக்ஸ் டேங்க் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத் தொகை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும், மேற்படி பணியினை தகுந்த ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.485/2024/இ1)

பொருள்- 06. குளித்தலை நகராட்சிக்கு சொந்தமான கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையத்தில் (FSTP) தண்ணீர் மற்றும் வணிக கழிவுகளை பகுப்பாய்வு செய்ய கரூர் மாவட்ட தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய துறையினரால் 08.01.2024 அன்று மாதிரிகள் சேகரிக்கப்பட்டதை தொடர்ந்து அவற்றை பகுப்பாய்வு செய்ய பகுப்பாய்வு கட்டணம் ரூ.78190/- செலுத்தக்கோரி மாவட்ட மாசுக் கட்டுப்பாட்டு வாரிய பொறியாளரிடமிருந்து Lr.No.DEE/TNPCB / F1525/KAR/2024, நாள்-06.02.2024 கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகை ரு.78190/-ஐ, இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). அனுமதிக்கலாம்.
2). இந்நகராட்சி பொது சுகாதாரப் பணிகளின் அவசர அவசியம் கருதி மாசு கட்டுப்பாட்டு துறைக்கு கட்டணம் செலுத்தியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1387/2018/இ1)

பொருள்- 07. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18, சுங்கவாயில் வடபுறம் பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கு அருகில் ஒரு கடையும், மேற்படி கடைகளுக்கு மாடி படியும் அமைக்க வேண்டி உள்ளது. எனவே, மேற்படி இடத்தில் கடைகள் கட்டுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.12.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத் தொகை பொது நிதியில் இருந்து செலவு மேற்கொள்ளவும், மேற்படி பணியினை தகுந்த ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.488/2024/இ1)

பொருள்- 08. குளித்தலை நகராட்சிக்குட்பட்ட அண்ணாநகர், கலப்புக்காலனி கதவு எண்.10/274.இல் வசித்து வரும் திரு.P.தனபால் என்பவர் கரூர் மாவட்ட அமர்வு நீதி மன்றத்தில் இந்நகராட்சிக்கு எதிராக தொடர்ந்த வழக்கு எண் OP.No.11/2023.இல் இந்நகராட்சி சார்பாக ஆஜராக வக்காலத்து தாக்கல் செய்து வழக்கினை நடத்தி வருவதற்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ.8500/- வழங்கக்கோரி திரு.K.S.M.சாகுல்அமீது நகராட்சி வழக்கறிஞரிடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் தொகை ரூ.8500/-ஐ, இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). அனுமதிக்கலாம்.
2). நீதிமன்ற வழக்குகளின் அவசர அவசியம் கருதி, மேற்படி தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.732/2023/பி2)

-------

**குளித்தலை நகராட்சி**
**குளித்தலை நகர்மன்றத்தின் 15.03.2024ஆம் தேதிய**
**அவசரக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்**

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 104 | அனுமதிக்கப்பட்டது. |
| 2 | 2 | 105 | அனுமதிக்கப்பட்டது. |
| 3 | 3 | 106 | அனுமதிக்கப்பட்டது. |
| 4 | 4 | 107 | அனுமதிக்கப்பட்டது. |
| 5 | 5 | 108 | அனுமதிக்கப்பட்டது. |
| 6 | 6 | 109 | அங்கீகரிக்கப்பட்டது. |
| 7 | 7 | 110 | அனுமதிக்கப்பட்டது. |
| 8 | 8 | 111 | அங்கீகரிக்கப்பட்டது. |

ஒம்/-P.சகுந்தலா,
நகர்மன்றத் தலைவர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல்/

ஆணையர்,
குளித்தலை நகராட்சி.